# இணையம்

தென் கரோலினா தமிழ்ச் சங்க வெளியீடு 09/2012




ஆசிரியர்: வெங்கட் நடராஜன்

# இணையம்

**"புன்சிரிப்பு ரயில்"**

பிறக்கும் போது மேல் உதடு ,மேலண்ணம் சேராமல் பிறப்பது ,ஒரு பிறவிக் குறை. இதை ,குழந்தை பிறந்தவுடன் ,ஒரு சிறிய அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து விடலாம். இந்த அறுவை சிகிச்சை வெறும் 250$ செலவு என்றாலும் ,அது கொடுத்து தம் குழந்தைகளின் குறையை சரி செய்ய முடியாத ஏழைப் பெற்றோர்கள் ஏராளம்!' Smile Train ' என்பது ,வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள ,உதட்டு பிளவு மற்றும் மேல்வை பிளவுடன் பிறக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இந்த surgery -ஐ அவர்களுக்கு இலவசமாகச் செய்ய உதவும் ஒரு நிறுவனம்.

முந்தைய தமிழர் திருவிழாவில் இந்த' லாபம் இல்லா 'நிறுவனத்திற்கு) non -profit organization) நாம் 1702$ நிதி திரட்டி கொடுத்தோம் என்று உங்களுக்கு தெரிந்திருக்கும். இந்த நற்பணியை ,'India Day' அன்றும் தொடர ,நம் இளைஞர் விக்ரம் கிருஷ்ணமூர்த்தி மனம் கொண்டார். ஆகஸ்ட் 25 அன்று காலை அவர் கிட்டத்தட்ட 20 லிட்டர்கள்' மாம்பழ லஸ்ஸி ' வீட்டிலேயே தயார் செய்து எடுத்து கொண்டார் ;ஒரு கோப்பை 1$ என்று விற்றதில் 93$ ,குவித்தார்.

அவருடைய குறிக்கோள் அன்று 1 surgery-க்காவது நிதி திரட்ட வேண்டும் என்பது. ஆனால் ,நமது உறுப்பினர் விஜி சஷிகாந்த் அவர்கள் ,முதல் விற்பனைக்கு 250$ ,செக் கொடுத்து ,அந்த குறிக்கோளை முதல் நிமிடத்தில் நிறைவேற்றி விட்டார்! இன்னொரு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி ,மற்றும் கொடையாளர்கள் சின்ஹா அவர்கள் ,மது அவர்கள் ,ஜோஷி அவர்களின் ஈடு கட்டும் (match ) மற்றும் தாராளமான கொடையினால் ,மொத்தம் 693$ திரட்டி ,Smile Train -க்கு அனுப்பி உள்ளார்!

விக்ரம் மற்றும் நற்பணி செய்யும் இதர உறுப்பினர்களின் இத்தகைய ஆற்றல் மேன்மேலும் வளர்ந்து பரிமளிக்க வாழ்த்துவோம்!

http://www.smiletrain.org/about/video/



**அன்னையர் தினம்**



கொலம்பியா தமிழ் அன்னைகள், (BOWLING) உருள் பந்து முடித்துவிட்டு பாம்பே கிரில் இரவு விருந்தில் பங்கேற்ற காட்சி



“அப்பாடா, இன்னிக்கு ஒரு நாளாவது சமைக்கிற வேல இல்ல”

# இணையம்

**நான் - கடவுள்**

"காய் கறி எதுவுமே பிரெஷ்ஷா இல்லையே, என்னத்த வாங்கறது" என்று என் மனைவியை கை பேசியில் அழைத்து கேட்டேன்.

"ஆமா, நீங்க ஆஞ்சு ஓஞ்சு கடைய மூடற நேரத்துல போனா, உங்களுக்காக காத்துக்கிட்டு இருப்பானா?, ஏதோ கிடைக்கிறதை வாங்கிட்டு வாங்க" - மறு முனையிலிருந்து உத்தரவு வந்தது.

"வேலை நேரத்துல கடை கன்னிக்கு போயிட்டிருந்தா office வேலைய எவன் பாக்கறது" என்று கேட்க நினைத்தேன். என்ன பதில் கிடைக்கும் என்று தெரிந்திருந்ததால் கேட்கவில்லை.

"யுவன் basketball shoes வாங்கணும்னு சொல்றானே?"

"ஆமாங்க, அடுத்த வாரத்துல இருந்து season ஆரம்பிக்குது, நல்ல shoes வேணும்னு school-ல கோச் சொல்லி விட்டாராம்.

"போன மாசம் தானே tennis shoes புதுசா வாங்கி குடுத்தேன், அது போதாதா?"

"இதுக்கு என்னமோ வேற மாதிரி வாங்கணுமாம், நீங்க டிக்ஸ்ல போயி யுவனோட Id Card-ஐ காமிச்சா, 20% discount கிடைக்கும். வாங்கிட்டு காலா காலத்துல வந்து சேருங்க".

பசங்களோட படிப்புக்கும் விளையாட்டுக்கும் சேர்த்து இனிமே world bank-ல தான் கடன் வாங்கணும் போல இருக்கே; நல்ல வேளை - இந்த இந்தியன் store-ம், டிக்ஸ்ம் ஒரே வணிக வளாகத்தில் இருக்கு,பெட்ரோல் செலவாவது மிச்சம் என்று நினைத்துக் கொண்டே பத்து வயது யுவனையும் கூட்டிக்கொண்டு டிக்சை நோக்கி நடந்தேன்.

December குளிரும், தேய் பிறையின் இருளும் மிகவும் அதிகமாக உணர்ந்தேன்.

எங்களுக்கு முன், சுமார் இருபது, முப்பது அடி தூரத்தில் ஒரு வயதான அமெரிக்க மாது Dillards-ஐ நோக்கி நடந்து கொண்டிருந்தார். திடீரென்று அவர் கையிலிருந்து ஏதோ கீழே விழுந்தது போல் தோன்றியது. ஆனால் அதை உணராதவர் போல் அவர் சென்று கொண்டிருந்தார். மெல்லக் கீழே குனிந்து அதை உற்று நோக்கினேன். என் கண்ணின் பாப்பா விரிந்தது. அது ஒரு இருபது டாலர் நோட்டு.

எனக்கு ஒரு நிமிடம் சபலம். அந்த மாதுவோ கவனிக்கவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த யுவனுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் இந்த பணத்தை எடுத்துக் கொண்டால் யாருக்கும் தெரியப் போவது இல்லை. கடவுளாகக் கொடுத்த பரிசென்று ஏன் நினைக்கக்கூடாது?

ஆனால் மறு நிமிடம், அது தவறென்று தோன்றியது. என்னுடைய செய்கை அப்போது வேண்டுமானால் எனக்கு ஒரு சிறிய லாபத்தை கொடுக்கலாம், ஆனால் யுவனுக்கு நான் ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்க முடியாது, காலமெல்லாம் மனசாட்சியின் உறுத்தலுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்றெல்லாம் தோன்றியது.

அவசரமாக அந்த மூதாட்டியை நோக்கி விரைந்து சென்று அவரை விளித்தேன்.

"Excuse me"

"Yes Sir"

"I think this dollar bill slipped from your hand" - I showed her the $20 note.

ஒரு நிமிடம் தன் கையிலிருந்த டம்பப் பையை சோதனை செய்தவள், மிகவும் மன்னிப்பு கோரும் குரலில் அது அவளுடைய பணம் தான் என்று உறுதி செய்தாள்.

"Thank you so much Gentleman. I did not notice that my purse was open".

"Thats ok" - பணத்தை கொடுத்து விட்டு திரும்பினேன்.

"Please have this as my token of appreciation" - இரண்டு ஒரு டாலர் நோட்டுகளை என் முன்னால் நீட்டினாள்.

"Thats fine. I just did what I am supposed to do. You need not have to pay me".

"God Bless you, Merry Christmas" - அந்த மூதாட்டியின் குரலில் நடுக்கம்.

# இணையம்

"Thanks, Merry Christmas to you too" - பதிலுக்கு வாழ்த்தி விட்டு டிக்சை நோக்கி நடந்தேன்.

Dicks'ல் எனக்கு பிடித்தது யுவனுக்கும், அவனுக்குப் பிடித்தது எனக்கும் பிடிக்கவில்லை. எங்கள் இருவருக்கும் பிடித்தது என் wallet-க்குப் பிடிக்கவில்லை.

"ஆனாலும் அறுபது டாலர் ரொம்ப ஜாஸ்திடா"

"அப்பா, nike shoe - ரொம்ப நாள் தாங்கும்பா"

"இது வளர்ற வயசு, ரொம்ப சீக்கிரம் உனக்கு இது சின்னதாயிடும்"

"ரோஹித்தும், சரணும் இது தான் வெச்சிருக்காங்க" - யுவன் தன் அடுத்த அஸ்திரத்தைப் பிரயோஹித்தான். ரோஹித் சேர்ந்திருக்கானேன்னு வயோலின், சரண் போறதால கராத்தே - தன் குழந்தைகளுக்கு ஆர்வம் இருக்கிறதோ இல்லையோ, மற்ற குழந்தைகள் - குறிப்பாக நண்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் குழந்தைகள் செய்வதெல்லாம் தன் குழந்தைகளும் செய்ய வேண்டுமென்ற தற்கால பெற்றோர்களின் மன சாஸ்திரத்தை நன்கு அறிந்திருந்தான்.

"முப்பது டாலருக்கு மேல Shoe வுக்கு குடுக்க முடியாது"

"அம்மாவுக்கு போன் பண்ணு, அம்மா வேண்டாம்னு சொல்லிட்டா, எனக்கு வேணாம்" - இது யுவனின் பிரம்மாஸ்திரம். திருமணமாகி ஐந்து வருடங்கள் கழித்து, நிறைய வேண்டுதல்களுக்கும் பிரார்த்தனைகளுக்கும் பிறகு பிறந்தவன். அம்மா செல்லம். இந்த கேஸ் மனைவியின் நீதி மன்றத்துக்குப் போனால் தீர்ப்பு எப்படி இருக்குமென்று சொல்லத் தேவையில்லை.

Shoe வை எடுத்துக்கொண்டு செக் அவுட் செய்ய வந்தோம்.

தள்ளுபடி, வரியெல்லாம் போக சுமார் ஐம்பத்தி இரண்டு டாலர் காட்டியது கணினி. Credit Card-ஐ இயக்கும் முன்பு, அந்த ஊழியர் என்னைப் பார்த்து கண் சிமிட்டி, மீண்டும் ஒரு சில எழுத்துக்களை பதிவு செய்தார். இப்போது கணினி முப்பத்தி இரண்டு டாலர் காட்டியது.

வியப்புடன் அந்த ஊழியரை நோக்கிய போது அவர் கூறினார்.

"Someone has paid $20 for the Shoes, so your due is only 32.20".

"May I know who that person is?"

"I am sorry sir. I was told not to reveal their identity."

"Still...I am curious and I want to thank them..."

"well, I cannot reveal the person. Anyway it’s a Christmas time. So, assume that Santa paid for it. Thanks, and wish you a Merry Christmas!!!"

************************* நிறைவு *********************************

குறிப்பு-

இந்த சம்பவம் நாங்கள் கன்சாஸ் நகரில் இருந்த போது என் வாழ்கையில் நடந்த உண்மை நிகழ்ச்சி. அந்த அமெரிக்க மூதாட்டி சென்ற கடையோ வேறு; எனக்குத் தெரிந்த வேறு எந்த நபரையும் நான் அந்தக் கடையில் பார்க்கவில்லை. யுவனுக்கும் எனக்கும் இடையில் நடந்த உரையாடல் முழுவதும் தமிழில் தான் நடந்தது.

C++, மனைவி, தேசிய விருது பெறும் திரைப்படங்கள் மாதிரி கடவுளையும் பல சமயங்களில் என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை...

**ஸ்ரீஸ்ரீ**

# இணையம்

**நலமாய் வாழ**

அனைவரும் நலமா? உடற்பயிற்சி பற்றி ஒரு வாசகி எனக்கு மின்னஞ்சல் செய்திருந்தாள். மன்னிக்கவும். என் இமெயில் மலைக்குவியலில் அது மறைந்து விட்டதால் என்னால் பதில் எழுத முடியவில்லை.

நாம் எலும்பு சத்தை பற்றி பேசினோம். உணவு மட்டும் பத்தாது. வலுவூட்டும் (weight bearing exercises) உடற்பயிற்சிகள் செய்தால் , எலும்பு (density) வலுப்பெறும், osteoporosis வருவதைத் தடுக்க முடியும்.

கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள்:

1) எடை தூக்கும்போது, 10 or 12—வது தடவை செய்யும் போது கடினமாக இருக்க வேண்டும்.

2) 3 sets of 10-12 repetitions அதே exercise செய்யவேண்டும்.

3) 6 வாரங்களுக்கு ஒருமுறை வேறு பயிற்சி செய்யவேண்டும். ஏனென்றால் நம் தசைகள் பழகிவிட்டால், அதனால் பயனில்லை.

இடுப்புக்கான பயிற்சி

1)Squats—பாதங்களை தோள்கள் அகலத்திற்கு பரப்பி நிற்கவும். தொடை நிலத்திற்கு இணையாக (parallel) வரும் அளவிற்கு உட்கார்ந்து எழுந்திருக்கவும்.

2) Lunges—ஒரு காலை நீளமான அடி (step) எடுத்து முன்னால் வைக்கவும். பின் கால் முட்டியை கொஞ்சம் மடக்கவும். நிலத்தை தொட்டால் பரவாயில்லை. முன் கால் முட்டி 90’ (பாகை) மடங்கி இருக்க வேண்டும். பின் இரு கால்களையும் சேர்த்து நிற்கவும். இன்னொரு பக்கம் repeat செய்யவும்.

3) Theraband sideways walking—ஒரு resistance band or cord எடுத்து ankles சுற்றி கைகளில் பிடித்துக் கொள்ளவும். முட்டி மற்றும் இடுப்பை சற்றே மடக்கி, sideways 10 தடவை நடக்கவும். பின் அடுத்த side—க்கு மாற்றவும்.

4) Single leg balancing—ஒரு cushion மேல் (அ) air pillow மீது எதையும் பிடிக்காமல் ஒரு காலில் ஒரு நிமிடம் balance செய்து நிற்கவும். பின் இன்னொரு காலுக்கு மாறவும்.

முதுகெலும்பு(spine) பயிற்சிகள்:

1) Prone thoracic extension—வயிற்றின் மீது படுத்து, கைகளை பின்னே கட்டிக் கொண்டு, தலை மற்றும் மார்பு பகுதியை தூக்கவும்.

2) Standing wall slides—சுவற்றின் மீது நேராக (straight) சாய்ந்து, நின்று கொண்டு கழுத்தை சற்றே சரி செய்து தலையையும் நேராக நிறுத்தி கைகளை மடக்காமல், மேலும் கீழும் பறவை போல slide செய்யவும்.

3) Lower abdominal exercise—கீழே படுத்துக்கொண்டு, ஒவ்வொரு முட்டியையும் உடலுக்கு பக்கமாக மடக்கி பிடித்து மாற்றி மாற்றி செய்ய வேண்டும். 3*10 செய்யவும். Low back arch ஆகக் கூடாது.

4) Sidelying bilateral leg lifts—side—ஆக படுத்து கொண்டு, elbow—ல் upper body யை support செய்யவும்.இடுப்பை தூக்கவும்.இரண்டு கால்களும் ஒன்றாக மேலே வரவேண்டும். பாதங்கள் கீழே இருக்கவேண்டும்.

5)Wrist extensions/ curls—1—2 lb weight எடுத்து, ஒரு table—ல் wrist ஐ rest செய்து, பிறகு மடக்கவும்.

6) Wall push up—சுவற்றை பார்த்துக்கொண்டு, கால்களை பின்னால் வைத்து, கைகளால் எடையை support செய்து,elbow வை நீட்டி மடக்கவும்.

Reference: www..nof.org

நன்றி : Dr. பூர்ணிமா



# இணையம்













Single leg balance

நோயாளி 1: என்னால 6 மாசம் தான் உயிரோட இருக்க முடியும்னு டாக்டர் சொன்னார். ஆனால் அதுக்குள்ள ஆஸ்பிட்டல் பில் கட்ட முடியல. அதனால இன்னும் ஒரு ஆறு மாசம் உயிரோட இருக்கலாம்னு சொல்லிட்டார்.

நோயாளி 2: நீங்க வேற, என்னோட டாக்டர், ஏதோ ஒரு மூணு மாசம் தான் வாழ முடியும்னு சொன்னார். நான் விவரமா, ஜனவரி, பிப்ரவரி, அப்புறம் மார்ச் 2212 ஐ choose பண்ணிட்டேன்

நோயாளி 1: ???

# இணையம்

**சித்திரை வெயிலே! நீ சுட்டது போதும் சொரணை கொடு!**

சித்திரை வெயிலே! நீ சுட்டது போதும் சொரணை கொடு! என்றார்
ஏதோ நீ சித்திரையில் மட்டும் சுட்டது போன்று ;
மாதம் இரண்டுக்கு முன் மாசியிலே ஆரம்பித்தாய்
இன்னும் இரண்டு திங்கள் எடுப்பாய் முடிப்பதற்கு!
சுட்டதினால் எங்கட்கு சொரணை வருமென்றால்
எப்போதோ வந்திருக்கும் கண்ணகி இட்ட தீ சுட்டதினால்!
அப்போதும் வரவில்லை ;அதற்கடுத்து அந்நியன் டயர்
அடைத்து வைத்து சுட்டானே அப்போதும் வரவில்லை
இப்போது அஸ்ஸாமில் நம்மவரே அந்நியன் போல் சுடுகின்றார்
இப்போதும் வரவில்லை! பின் எப்போது வரும் ?
என்ன செய்தாலும் எங்கட்கு சொரணை இப்போது வாராது!
"சாதிப்பற்றும் சமயப்பற்றும் காதல் அன்ன கட்சிப்பற்றும்
மோதல் இல்லா மொழியின் பற்றும்
தேசப்பற்றுமுன் சிறுபற்றாகுக "என பாடியதும் நாங்கள் தான்
பண்பாட்டு மன்றங்கள் பலசாதியின் பெயரால் பரப்புவதும் நாங்கள் தான்!
என்ன செய்தாலும் எங்கட்கு சொரணை இப்போது வாராது!
உழைக்கும் வர்க்கமே ஒன்று சேர்! உன் உரிமைக்காக போராடு!! என
போட்ட கூக்குரலின் சூடு ஆறுமுன் சூடான பால் அருந்தி
சொகுசான குளுமை ரயில் ஏறுவர் எங்கள் தலைவர்கள்
இருப்பினும் எங்கட்கு சொரணை வாராது!
என்ன செய்தாலும் எங்கட்கு சொரணை இப்போது வாராது!
அண்ணாந்து பார்க்கின்ற மாளிகைகள் ;அதன் அருகினில் ஓலைக்குடிசைகள்
ஆர்ப்பரிக்கும் அரசு அதிகாரிகள் அள்ளினர் மக்களின் உடைமைகளை
ஆக்கிரமிப்பாம் அரசு நிலத்தில் ;அகற்றுவதே தங்கள் நோக்கமாம்
தன்நிலத்து ஆக்கிரமிப்பை தட்டிக்கேட்போரே
தண்ணீரே தராமல் எங்கள் தாகத்தை ஆக்கிரமித்தீரே
உங்களை அகற்றுவது எப்போது?
என்ன செய்தாலும் எங்கட்கு சொரணை இப்போது வாராது!
பின் எப்போது வரும்?
பங்கீட்டு கடைதனிலே பகல் வெயிலில் அட்டைகட்கு
வருமான இலக்கென்ற வர்க்க பேதமில்லாமல்
அனைவர்க்கும் சொரணைதனை அளவிட்டுக்கொடுப்போம் என்றால்
அதற்கும் பஞ்சம் தான்! அரசின் சரக்காயிற்றே!
என்ன செய்தாலும் எங்கட்கு சொரணை இப்போது வாராது!

**ஆக்கம்- திரு. ச. மீனாட்சிசுந்தரம் (ஆனந்தியின் அப்பா)**

**ஊருக்குழைப்போம் வாரீர்!**

நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்திற்கில்லை
நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்க காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்!

**டாக்டர் வ. சுப. மாணிக்கம்**
**முன்னாள் துணைவேந்தர்**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**நன்றி: ஆனந்தி பாண்டியன்**

# சிறுவர் பகுதி

**அதிபர் தேர்தல் 2012**

அமெரிக்க அதிபருக்கான தேர்தல் இவ்வாண்டு நவம்பரில் நடைபெற உள்ளது. ஜனநாயக கட்சி சார்பில் ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் ராம்னியும் போட்டியிடுகிறார்கள். இவ்விரு கட்சிகளின் வெற்றி வாய்ப்பு சரிசமமாக இருப்பதால், இத்தேர்தல் அமெரிக்கர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, ஜனநாயக கட்சிக்கு வெற்றி வாய்ப்பு சற்றே கூடுதலாக இருப்பதாக கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது. நவம்பர் தேர்தலைத் தொடர்ந்து, வெற்றிபெற்ற வேட்பாளர், ஜனவரியில் அதிபராக முறைப்படி பதவியேற்பார்.

பொதுவாக, அமெரிக்க அதிபருக்கான தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. ஒருவர் தொடர்ந்து இரு முறைக்கு மேல் இப்பதவியை வகிக்க இயலாது. இத்தேர்தலில் நம் கொலம்பியா தமிழர்கள் பலர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

| | |
|---|---|
| President : | அதிபர் |
| Election: | தேர்தல் |
| Democratic party: | ஜனநாயகக் கட்சி |
| Republic party: | குடியரசுக் கட்சி |
| Equal: | சரிசமம் |
| Opinion poll: | கருத்து கணிப்பு |
| Candidate: | வேட்பாளர் |
| Vote: | வாக்கு |





**நிகழ்ச்சி:**

தென் கரோலினா தமிழ் சங்கத்தின் கோடைக் கொண்டாட்டம் தேதி: செப்டம்பர் 29, 2012 நேரம்: காலை10 மணி இடம்: செச்குய் சென்ட்டின்னியல் பூங்கா , குடில் 002. அன்பார்ந்த நண்பர்களே, 2012ம் ஆண்டின் கோடை கொண்டாட்டம் செப்டம்பர் மாதம் 29ம் தேதி (சனிக்கிழமை ), காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். அனைவரும் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி கொள்கிறோம். இங்ஙனம் , தென் கரோலினா தமிழ் சங்கம்

தற்சமயம் 9 குடும்பங்களே பதில் அளித்துள்ளனர். பதில் அளித்த அனைவருக்கும் நன்றி. சரியான எண்ணிக்கை தெரிந்தால், சாப்பாடு மற்றும் இதர ஏற்பாடுகள் செய்ய உதவியாக இருக்கும். கூடிய விரைவில் பதில் அளிக்குமாறு வேண்டி கொள்கிறோம்.

# இணையம்

**"கல்லணை - "வரலாறுகள் கடந்து நிற்கும் சரித்திரம் ..**
உலகின் மிகப் பழமையான அணை!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தை ஆண்ட கரிகால சோழன் காவிரில் அடிக்கடி பெருவெள்ளம் வந்து மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதைத் தடுக்க காவிரியில் ஒரு பெரிய அனையைக் கட்ட முடிவெடுத்தான் . ஆனால் ,அது சாதாரன விஷயம் அல்லவே . ஒரு நொடிக்கு இரண்டு லட்சம் கனநீர் பாயும் காவிரியின் தண்ணீர் மேல் அணைக்கட்டுவதற்கும் ஒரு வழியைக் கண்டுப...ிடித்தார்கள் தமிழர்கள்.



நாம் கடல் தண்ணீரில் நிற்கும்போது அலை நம் கால்களை அணைத்துச் செல்லும் .அப்போது பாதங்களின் கீழே குறுகுறுவென்று மணல் அரிப்பு ஏற்பட்டு நம் கால்கள் இன்னும் மண்ணுக்குள்ளே புதையும் . இதைத்தான் சூத்திரமாக மாற்றினார்கள் அவர்கள் . காவிரி ஆற்றின் மீது பெரிய பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டார்கள் . அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் போகும் . அதன் மேல் வேறொரு பாறையை வைப்பார்கள். நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசிவிடுவார்கள் . இப்போது இரண்டும் ஒட்டிக்கொள்ளும் . இப்படிப் பாறைகளின் மேல் பாறையைப் போட்டு ,படுவேகத்தில் செல்லும் காவிரி நீர் மீது கட்டிய அணைதான் கல்லணை.

ஆங்கிலப் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் தான் இந்த அணையைப் பற்றிப் பலகாலம் ஆராய்ச்சி செய்து இந்த உண்மைகளைக் கண்டறிந்தார் . காலத்தை வென்று நிற்கும் தமிழனின் பெரும் சாதனையைப் பார்த்து வியந்து அதை ' தி கிராண்ட் அணைக்கட் ' என்றார் சர் ஆர்தர் காட்டன் . அதுவே பிறகு உலகமெங்கும் பிரபலமாயிற்று.

உலகிற்கு பறைச்சாற்றுவோம் தமிழனின் பெருமைகளை..